# திருக்காவலூர்க் கலம்பகத்தின் சிறப்புகள்

*முனைவர் வெ.ரா. மீனாட்சி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அக்சிலியம் கல்லூரி, வேலூர்

***ஆய்வுச் சுருக்கம்***

*கிறித்தவர்கள் தமிழுக்கு அளித்த கொடை அளவிடற்கரியன. எண்ணிலடங்கா இலக்கியங்களைத் தமிழுலகுக்கு வழங்கிய பல கிறித்தவ அறிஞர்களுள் மிகவும் முக்கியமானவர் வீரமாமுனிவர். இவருடைய இயற்பெயர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி ஆகும். இவர் இத்தாலி நாட்டில் மாண்டுவா மாவட்டத்தில் காஸ்திக்கினியோன் என்ற சிற்றூரில் பிறந்தவர். கிறித்துவ சமயக் கருத்துக்களைப் பரப்புவதற்காக இந்தியா வந்த இவர் தமிழகத்திற்கு வந்து தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் பிழையறக் கற்றார். தான் பெற்ற புலமை மிகுதியால் காப்பியம், இலக்கணம், சிற்றிலக்கியம், அகராதி, சிறுகதை முதலிய துறைகளில் பல நூல்களை இயற்றினார். அவற்றுள் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுவது திருக்காவலூர்க் கலம்பகம் ஆகும். இந்நூலின் சிறப்புகளை இவ்வாய்வுக் கட்டுரை விளக்கியுள்ளது.*

***குறிப்புச் சொற்கள்:*** *தமியன், தளை, கன்னிச்சங்கு, விண்டிறந்தனை, கோளணிந்த குழல்.*

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6478

## முன்னுரை

அரிய நூல்கள் பலவற்றைப் படைத்தளித்த வீரமாமுனிவர் தாம் பெற்ற இறை ஆசீரால், கவித்துவப் பேற்றால், ஒப்புயர்வற்ற படைப்பாற்றலால் தமிழ் மொழிக்கு பெருந் தொண்டாற்றியுள்ளார். தாம் ஏற்றுக் கொண்ட துறவற வாழ்வில் தூய்மையுடன் கூடிய நெறி நின்று மக்களுக்கு அர்ப்பணிப்புணர்வுடன் பற்பல சேவைகளாற்றிய மாமனிதராக வீரமாமுனிவர் திகழ்ந்தார். தூய அன்னை மரியாளின் முழுநேர பக்தனாய், முக்தி நாடும் வித்தகனாய் இவர் வாழ்ந்து மரியன்னைக்காகப் பல ஆலயங்களை நிர்மாணித்தார். அன்னை மரியாளின் புகழ் அகிலமெங்கும் பரவ நூலகள் பல இயற்றினார். காலத்தின் இன்பமாக, கலம்பகத்தின் கீதமாக திருக்காவலூரில் எழுந்தருளியுள்ள அடைக்கல மாதாவை புகழ்ந்து இவர் இயற்றியதே திருக்காவலூர்க் கலம்பகமாகும். இந்நூல் கிறித்துவ இலக்கியத்தில் உள்ள ஒரே கலம்பக நூலாகும். இந்நூலில் திருமறை உண்மைகள், அடைக்கல அன்னையின் சிறப்புகள், கிறித்துவின் மகத்துவத்துடன் கூடிய மீட்பு முதலான செய்திகள் அழகுற விளக்கப்பட்டுள்ளன. இவற்றை முன்னிறுத்துவதாய் இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

### திருக்காவலூர்க் கலம்பகம்

திருச்சி மாவட்டம், கொள்ளிடம் ஆற்றின் வடக்குக் கரையில் அமைந்துள்ள ஏலாக் குறிச்சி என்ற திருக்காவலூரில் கோயில் கொண்டுள்ள அடைக்கல அன்னையின் புகழைப் பரப்ப எழுதப்பட்டதே திருக்காவலூர்க் கலம்பகம் ஆகும். தமிழ்மொழியில் உள்ள அனைத்து கலம்பக நூல்களும் ஆண்பாற் கலம்பக நூல்களாக உள்ளன. அதாவது ஆணை பாட்டுடைத் தலைவனாக வைத்தே கலம்பகம் பாடப்பட்டுள்ளது. ஆனால் முதன்முதலில் வீரமாமுனிவர் பெண்பாற் கலம்பகமாக திருக்காவலூர்க் கலம்பகத்தைப் படைத்து புரட்சி செய்துள்ளார். அடைக்கல மாதா எனும் பெண் கடவுளே பாட்டுடைத் தலைவியாக படைக்கப்பட்டுள்ளது தனிச் சிறப்பாகும். பிற கலம்பக நூல்கள் சிற்றின்பத்தை, உலக வாழ்வியல் அனுபவத்தை பறை சாற்றி நிற்கின்றன. ஆனால் திருக்காவலூர்க் கலம்பகத்தில் இறையனுபவமும், பரசுகமும், பேரின்பச் செய்திகளும் கலம்பகம் முழுவதும் காட்சிப்படுத்தப்பட்டு அருளாட்சி தரும் அற்புத நூலாகப் படைக்கப்பட்டுள்ளது மிகவும் அற்புதமானது. இந்நூலில் 20 உறுப்புகள் பேசப்படுகின்றன. வேறு எந்த கலம்பக இலக்கியத்திலும் இல்லாத சமூக உல்லாசம் என்ற உறுப்பு குறித்து வீரமாமுனிவர் அழகுற விளக்கியுள்ளது புதுமையான ஒன்றாகும். 100 பாடல்களைக் கொண்ட இந்நூல் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, துறை. தாழிசை, விருத்தம் முதலிய பல பாவகைகளால் இயற்றப்பட்டுள்ளது,

### அன்னை மரியாளின் மாண்பு

நூலியற்றும் புலவர்கள் காப்புச் செய்யுளில் கடவுளரைப் போற்றுவது மரபு. திருக்காவலூரில் கோயில் கொண்டுள்ள, பெண்களில் புனிதரான அடைக்கல அன்னையை புகழ்ந்து முதற் செய்யுளைப் புலவர் யாத்துள்ளார்.

**“உருவில்லா னுருவாகி யுலகுல லொரு மகனுதிப்பக்**
**கருவில்லாக் கருத்தாங்கிக் கன்னித்தாயினையே”[1]**

அன்னை மரியாள் பாற்கடலில் உதித்த கன்னிச்சங்காய் உருவகப்படுத்தப் பட்டிருக்கிறார். தேவ ஆவியின் வல்லமையால் மரியாள் கருவுற்று, இயேசுவை ஈன்றெடுத்த அற்புதச் செய்தியானது இப்பாடலில் விளக்கமுறுகிறது. தூயவளாகிய கன்னி மரியாள் இயேசு வாகிய முத்தை ஈன்றெடுத்தமையால் கன்னிச்சங்கென உருவகப்படுத்தப்பட்டுள்ளார். சங்கு, சிப்பி முதலானவை கடலின் மேல் மட்டத்திற்கு எழும்போது சுவாதி நட்சத்திரமாய் இருக்கின்ற பட்சத்தில் மழைத்துளியை ஏற்றுக் கொண்டதாயின் கருக்கொண்டு முத்தாய் முகிழ்வடையக் கூடியன. அது போலத்தான் உருவிலா இறைவன் மனித உருத்தாங்கி பிறப்பெடுக்க, கருத்தாங்கிய கன்னித்தாயாய், பாற்கடல் சங்காய் மரியாள் இருக்கிறார் என்பது இப்பாடல் வழி தெளிவாகிறது.

அன்னையாய் மகளாய் மரியன்னை பொலிதல் மகோன்னதப் படைப்பாக படைக்கப்பட்ட மரியன்னை இறை கருதாங்கும் தாயாக, புனிதராக விளங்கியதோடு மட்டுமின்றி இறை மகளாகவும் பாசத்துடன் வீற்றிருந்தார் என்பதனை,

**“உந்தையை யீன்று நீயொரு வற்கீங்கரும்**
**வந்தை யோடன்னையு மகளுமாயினை”[2]**

என்ற வரிகளில் வீரமாமுனிவர் படைத்துக் காட்டியுள்ளார். பாசமிகு மகளாய் இருந்த மரியா பரிவு நிறை தாயாய் மரியன்னையாய் மலர்ந்த பெருமைமிகு செய்தியானது இச்செய்யுளில் விளக்கமுறுகிறது.

### திருக்காவலூரின் பெருமை மிகுதாய்

உலகவுயிர்களுக்கு அருள் செய்து, முடிவற்ற அன்பைத் தரக்கூடியவள், கடிதென வேகமுடையவள், கொள்ளிட வட கரையிலுள்ள திருக்காவலூரில் கோயில் கொண்டவளாகிய அடைக்கல அன்னையின் திருவடிகளை வணங்கினால் தவம் செய்வதற்கு நிகரானப் பலனை பெறலாம் என்பதை,

**"உயிர் ஆம் தயையாளை ஓம்பு அனந்தத் தாளை
அயிரா மறைமொழியாளை - பயிர் ஆரும்
சிந்துசேர் காவலூர்ச் சேர்தாளைப் பாடினேன்
இந்து சேர்தாள் சேர யான்"[3]**

என்ற பாடலில் வீரமாமுனிவர் தெளிவாக எடுத்துரைத்து திருக்காவலூர் அன்னையை வணங்கினால் தவப்பேறு அடையலாம் என்பதை விளக்கியுள்ளார்.

### பேரின்ப பெருவாழ்வு வாழும் திருக்காவலூர் மக்கள்

ஆண், பெண் இருவரில் ஒருவருக்கு மட்டும் காமநோய் தோன்றுவதற்கு கைக்கிளை என்று பெயர். அதாவது ஒருதலைக் காமம் என்று இந்நிலையை அழைப்பர். இந்நூலில் ஒரு தலைக் காதலில் மையல் கொண்ட ஒருவன் திருக்காவலூருக்கு வருகிறான். அன்னையின் அருட்கோலத்தைக் கண்ட மாத்திரத்திலேயே அவன் உள்ளத்தில் இருந்த காமநோய் விலகுகிறது. மனந்தெளிந்த அவன் மரியன்னையைப் போற்றி பேரின்ப நெறி செல்ல முற்படுகிறான். இதனை,

**"ஒருவாதிங் காள்குளிர் பும்தாள் அணிந்தாள் ஒருகலையாய்த்
திருவாய் முகம் ஒத்தாய் ஆழ்ந்த கலையாய்ச் செகம் குளிர்க்கும்
தருவாய் நிழல் காவலூர் வதிந்தாய் இனித்தான் சுடவோ
மருவாது எக்காலமும் இங்கு இலை கைக்கிளை மாலை அதே"[4]**

என்ற பாடல் உணர்த்தி நிற்கிறது. காதல் நோய்க் கொண்டவர்களுக்கு நிலவு சுடும். ஆனால் திருக்காவலூர் அன்னையின் அருளாசிப் பெற்ற அருளுள்ளங்களுக்கு நிலவுச் சுடுவதில்லை. ஏனெனில் மரியன்னையின் அருள்கண் காணப்பெற்றவர்கள் சிற்றின் பத்திலிருந்து விடுபட்டு, பேரின்பப் பெருவாழ்வு வாழ்கின்றனர் என்பதனை ஆசிரியர் இப்பாடல் மூலம் எடுத்துரைத்து ள்ளமை புலனாகிறது.

### அன்னை மரியாளின் தெய்வமகனின் அற்புதம்

திருக்காவலூர்க் காவல் தெய்வத்தின் தமியனாய், தரணியின் தளையறுத்த தகை சால் சான்றோனாகிய தெய்வமகன் மகிமை பொருந்தியவர். இறைமகனின் தோள்கள் விசும்பிலுள்ள நிலவு, கதிரவன், விண்மீன் முதலியவற்றையும், உலகிலுள்ள நவமணி மற்றும் ஒளி தரும் பொருட்களையும் பு, பழம், உணவு முதலியவற்றையும் தரணியிலுள்ள அனைத்தையும் எல்லையின்றி உண்டாக்கி, மனிதர்களுக்கு பயன் அளித்ததை, திருக்காவலூர்க் கலம்பகத்தில் வீரமாமுனிவர் தெளிவாக விளக்கிக் காட்டியுள்ளார்.

**"வெளிமதி கதிருருக்குல மணிநிதி யொளி முகத்தவை
மலர் கனியமு துமற்றைய பலவுலகுள வனைத்தையு
மீறிலா தெங்கணு மருளிப் பயந்தன"[5]**

அன்னை மரியாளின் இறைமகன் மானிடர்க்கு அனைத்தையும் தந்து, காத்து ரட்சகராய் விளங்குகின்ற செய்தி தெளிவாக இப்பாடல் வழி எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

### திருவடைக்கல நாயகியின் மாண்பு

பிறைநிலவின் மேல் நிற்கும் திருவடிகளை உடையவள், அறிவுக்கு எட்டாத மறைநூல், மயக்கம் நீங்கிய நன்னெறி, அருள் நிறைந்த மேகம், பலராலும் போற்றப்படுகிற ஒழுக்கம், சுடர்விடும் சுரியன், உலக மீட்பரை கருத்தாங்கியவள், அடைக்கலம் தரும் பங்கயமாய் அருள்பாலிக்கக் கூடியவள், இறைவன் தந்த பாதுகாப்பை மக்களுக்குத் தந்து அரணாக விளங்கக் கூடியவள் திருவடைக்கல நாயகி என்பதனை,

**"மதியெழுந்த பாதமே, மதிகடந்த வேதமே
மருண்மறந்த நீதமே யருள் சிறந்த கீதமே
துதியெழுந்த சூலியே விதி விரிந்த மாலியே
துணை யெழுந்த சீலியே தினையமைந்த வேலியே
கதியறும்பு கமலமே நிதியரும்பு மமலமே
கடவுடந்த பதவியீங் கிடவுயர்ந்த வுதவியாய்
நதி வழங்கு காவலூர்ப் பதிவழங்கு காவலே"[6]**

என்ற பாடல் வழி வீரமாமுனிவர் விளக்கி, திருக்காவலூர்க் கலம்பகத்தில் கோயில் கொண்டுள்ள மரியன்னையின் மாண்பை எடுத்துரைத்துள்ளார்.

**கலம்பக புதிய உறுப்பு சமூக உல்லாசம்**

கலம்பகம் என்பது 18 உறுப்புகளைக் கொண்டது. ஆனால் திருக்காவலூர்க் கலம்பகம் 19வது உறுப்பாக சமூக உல்லாசம் என்ற புதிய உறுப்பை அறிமுகப் படுத்தியுள்ளது. அடைக்கல அன்னை தனது வாகனமாகிய நிலவின் மீது அழகுற எழுந்து வருகையில் அவளது எழிலார்ந்த தோற்றப் பொலிவைக் கண்டு சமூகத்தில் மாந்தர் அடையும் மகிழ்ச்சியைக் குறிப்பிடுவது சமூக உல்லாசம் என்ற புதிய உறுப்பாகும். அடைக்கல அன்னை செம்மாந்து தேரில் பவனி வருகின்ற அழகுப் பொலிவினை,

**"வினையுற, மனையுற மருளட வருளிட**
**வாகன மாமிற் றெழுந்து வரவே**
**விவை வடி வடியடி யுறையுறு மறுவறு**
**காவலூரின் வதிந்தணுகினாள்"**[7]

அடைக்கல அன்னை தனது வாகனத்தில் வலம் வருகையில் மாந்தர்களின் தீவினைகள் மறைந்து போகிறது. மக்கள் அனைவரும் அடையும் பேரின்ப மகிழ்ச்சி அதிகரிக்கிறது. மனிதர்களின் மன மயக்கத்தை அழிக்கும் பேற்றையும் அன்னை கொண்டிலங்குகிறாள்.

மானிடர்க்கு அருள் செய்யவே பிறப்பெடுத்தவர் அன்னை திருக்காவலூர் மாதா என்பதனை இப்பாடல் வழி வீரமாமுனிவர் விளக்கியுள்ளார். கலம்பகத்தில் புது உறுப்பாகிய "சமூக உல்லாசம்" மக்களை பேரின்ப வாழ்வு நோக்கி உல்லாசப் பயணம் மேற்கொள்ள வைக்கிறது எனில் அது மிகையாகாது.

**திருக்காவலூர் அன்னையின் சிருங்காரத் தோற்றம்**

மரியாளின் பேரழகை வர்ணிக்கும் விதத்தில் வீரமாமுனிவர் திருக்காவலூர்க் கலம்பகத்தில் பல பாடல்களை இயற்றியுள்ளார். நிலவு போன்று ஒளிவீசும் திருவடிகளையும், இனிமை தரும் ஒளி பொருந்திய கதிரவனைப் போன்ற உடையழகும், மகிழ்ச்சித் தருகின்ற சிங்க நெடுங் கொடியாகிய விருதுக் கொடியின் அழகுடையவராக திருக்காவலூர் நாயகி விளங்குகிறாள். பகல் நேரத்திலும் மறைந்து ஒளிரும் பன்னிரு விண்மீன்களும் ஒளி விடுகின்ற முடியழகுடையவள் என்றும், வானுலக வீட்டைத் தானே ஒளிரச் செய்கின்ற முகஅழகும் உடைய அடைக்கல அன்னை புவுலகிற்கு கருணைப் புரிந்து அருள்பாலிக்க "திருக்காவலூர்" என்ற ஊரில் அழகுற வீற்றிருக்கிறார் என்று வீரமாமுனிவர் விளக்கியுரைத்துள்ளமையை,

**"மீனரும்சிரத்தழகிஅழகிவிண்ணரும்பும்**
**சிரத்தழகு விரிவான் வீட்டைத்**
**தானரும்பு முகத்தழகி தயையரும்பக்**
**காவனலூர் தங்கினாளே"**[8]

என்ற பாடலில் சித்தரித்துள்ளது சிறப்பிற் குரியதாகும். மேலும் கன்னித்தாயே! கற்பக விருட்சமே! நீ விண்ணக வாயிலைத் திறந்து விட்டாய், கடவுளுடைய எண்ணத்தைத் திறந்து காட்டினாய், சூரியனை ஆடையாக உடுத்திக் கொண்டாய், விண்மீன்களை முடியாக அணிந்து சந்திரனின் மேல் நிற்கக் கூடிய திருவடியுடையவளாகிய அன்னை, மானிடர்க்கு அடைக்கலம் தருமிடமாய் இருக்கிறாய். கடவுளின் அருளை உன் ஆற்றலாக உடையவளாக இருக்கிறாய். இறையே இறைஞ்சி உம்மிடம் மகவாய் வரும் பெரும்பேற்றினை நீர் பெற்றாய் என்று மரியன்னையை புகழும் பாடல்,

**"விண்டிறந்தனை, எண்டிறந்தனை**
**பானணிந்தனை, மீனணிந்தனை**
**மதி பதத்தினை, கதிபதத்தினை**
**அருள்வலத்தினை, பொருளிடத்தினை"**[9]

இதுவாகும். இவ்வரிகள் திருக்காவலூரில் வீற்றிருந்து மக்களுக்கு அருளாசி புரிந்து வரும் மரியன்னையில் எழில்மிகு தோற்றத்

*தினை வர்ணிக்கும் அற்புத வரிகளாக விளங்கி அன்னையின் மகிமையை அழகுற எடுத்துக்காட்டியுள்ளது.*

## தொகுப்புரை

*திருக்காவலூரரின் காவல் நாயகியாய் வீற்றிருக்கும் கன்னி மரியாளை வீரமா முனிவர் திருக்காவலூர்க் கலம்பகத்தில் கன்னிச்சங்காக வர்ணித்துள்ளார். விண்ணுலக அரசியாய் கொலு அமர்த்தியுள்ளார். உலகவுயிர்களை ரட்சிக்கும் அகில ரட்சகியாய் உருவகித்துப் போற்றி புகழ்ந்துள்ளார். இறை இயேசுவின் மகோன்னத தாயாக பெருமைப் படுத்தியுள்ளார் முதலான செய்திகளை இவ்வாய்வுக் கட்டுரை வழி கண்டுணர முடிகிறது.*

## துணை நின்ற நூல்கள்

*1. அ. முத்துசாமி பிள்ளை, (உ. ஆ), வீரமாமுனிவர் அருளிச்செய்த திருக்காவலூர்க் கலம்பகம் ப . 3*
*2. மேலது பக். 22*
*3. மேலது பக். 23*
*4. மேலது பக். 21*
*5. மேலது பக். 44*
*6. மேலது பக். 209*
*7. மேலது பக். 112*
*8. மேலது பக். 57*
*9. மேலது பக். 30*